5th April 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : அன்னிய நாட்டிலிருந்து தூது கோஷ்டிகள் இங்கு வருகின்றன. இம்போர்ட் எக்ஸ்போர்ட் பாங்கு தூதுகோஷ்டி இங்கே வந்ததைக் குறித்து கனம் அங்கத்தினர் கேட்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து இம்போர்ட் எக்ஸ்போர்ட் தூதுகோஷ்டியினர்........

THE HON. SRI R. VENKATARAMAN : அமெரிக்காவிலிருந்து இங்கு வந்த இம்போர்ட் எக்ஸ்போட் பாங்கு தூதுகோஷ்டியினர் சென்னை ராஜ்யத்தில் இருக்கும் தொழில் நிலைமையை அறிவதற்காக எங்களுடன் நீண்ட நேரம் விவாதம் நடத்தினார்கள். இங்கே என்ன என்ன தொழில்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்பதை அவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : கரும்புச் சக்கையிலிருந்து அருமையான பேப்பர்கள் தயாரிக்க முடியும் என்று, ஏற்கெனவே நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தென்னாற்காடு ஜில்லாவில் கரும்பு ஏராளமாக..........

MR. SPEAKER : இந்தக் கேள்வி நெய்வேலியைப்பற்றியது.

SRI A. V. P. ASAITHAMBI : நெய்வேலித் தொழிற்சாலைகளிலிருந்து வரும் வருமானத்தில் நமக்கும் மத்திய சர்க்காருக்கும் உள்ள பங்குகள் முறையே 20 சத விகிதமும் 80 சத விகிதமும் ஆகும் என்பது உண்மையா? நெய்வேலித் தொழிற்சாலைகள் எல்லாவற்றையும் ராஜ்ய சர்க்காருக்குச் சொந்தமாக்க வேண்டுமென்றால், செலவான பூராத்தொகையையும் ராஜ்ய சர்க்கார் கட்ட வேண்டுமென்பது உண்மையா? அது உண்மையென்றால், மற்ற ராஜ்யங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள எல்லாத் தொழிற்சாலைகளும் அணைக்கட்டுகளும் இந்த விதிக்கு உட்பட்டவைதானா?

THE HON. SRI R. VENKATARAMAN : நெய்வேலித் தொழிற்சாலையில் இந்த சர்க்காருக்கு உள்ள பங்கு, நிகர லாபத்தில் 25 சத விகிதம். அதற்காக மூலதனம் பூராவையும் மத்திய சர்க்காரே போடுகிறது. அந்த மூலதனம் சுமார் 70 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வளவு தொகையை நாம் போட முடியாது என்று ராஜ்ய சர்க்கார் நினைக்கிறது. நிகர லாபத்தில் 25 சத விகிதம் நமக்குக் கிடைப்பது, நமக்கு மிகவும் சாதகமான நிலைமை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதர ராஜ்யங்களில் இருக்கும் மத்திய சர்க்கார் தொழில்களைப்பற்றி எனக்கு விவரம் தெரியாது.

MR. SPEAKER : Question No. 40 relates to the Home Minister. He has been held up because his train is late by two hours. This will be taken up later.

Scholarship

*41 *Q.*—DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state the number of Scheduled Caste students who were benefited by the grant of scholarships last year?

THE HON. SRI P. KAKKAN : 30,121 students belonging to eligible communities were benefited by the grant of scholarships during 1956-57.

SRI P. S. SANTHANAM : கனம் அங்கத்தினர்கள் போடும் மூலக் கேள்விகளுக்குக் கனம் அமைச்சர்கள் தமிழில் பதில் சொன்னால் ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்கள் விஷயத்தைப் புரிந்துகொண்டு கேள்விகள் போடுவார்கள்.

MR. SPEAKER : முதலில் தவறாகக் கேள்விகள் போட்டுவிட்டாலும் புரிந்துகொண்ட பிறகு சரியாகக் கேள்வி போடுங்கள் நான் ஆட்சேபிக்கவில்லை.

Professor of Dental Surgery

a * 508 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the basis on which the present incumbent in the post of Professor of Dental Surgery in the Dental Wings of the Madras Medical College was selected;

(b) whether the Government have received any protest recently from the State Dental Council that the present incumbent does not possess the required qualifications; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Dr. M. G. Rao had higher training in Dentistry in the United States of America under the Scheme sponsored by the Government of India in the Ministry of Health. The post of Professor of Dental Surgery, Madras Medical College, Madras, was vacant from February 1950. The University and the Government considered that the qualifications possessed by him were sufficient and he was accordingly appointed to the post in April. 1950.

(b) & (c) No, Sir.

Madras Medical College

* 563 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state the qualifications prescribed for the post of Professor in the Dental Wing of the Madras Medical College?

THE HON. SRI M. A. MANICKAVELU : A degree in Dentistry of the University of Bombay or Punjab or any other Indian or foreign University approved by the Dental Council of India or a diploma in Dentistry of the Royal College of Surgeons, England or Edinburgh; and experience in Dental Surgery preferably with teaching in a Dental Institution and preferably also a medical degree of a recognized University.

SRI M. KALYANASUNDARAM : அவருக்கு இருக்கும் தகுதி சம்பந்தமாக அவர் சர்க்காருக்கு ஏதாவது சர்டிபிகேட்டைக் காண்பித்திருக்கிறாரா? அந்த சர்டிபிகேட் உண்மையானதல்ல என்று ஆட்சேபித்து யாராவது சர்க்காருக்குப் புகார் செய்திருக்கிறார்களா? அப்படியானால் அந்தப் புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

a Question postponed from the list for 1st April 1958.